# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்: 11 தேதி:- 26.12.2014

## 30.12.2014 அன்று தூத்துக்குடியில் மாநிலச் செயலர் உண்ணாவிரதம்...

அன்புமிக்க தோழர்களே,

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் அனேகமாக முடங்கிவிட்ட நிலையில் இருக்கிறது. நமது மாவட்டச் சங்கம் தேங்கிக்கிடக்கும் 30 ஊழியர் பிரச்சனைகளில் தீர்வு காண வலியுறுத்தி பேசி பார்த்தது. எழுத்துப்பூர்வமாக கடிதம் கொடுத்தது. இறுதியில் போராடியும் விட்டது. துணைப் பொது மேலாளர் பணி ஓய்வு நெருங்கிவிட்டதால் பிரச்சனை தீர்வில் அக்கரை காட்டுவதில்லை.

நாகர்கோவில் பொது மேலாளர்தான் தூத்துக்குடி மாவட்டத்திற்கும் கூடுதல் பொறுப்பு. கூடுதல் என்பதாலேயே பொது மேலாளர் அவர்கள் கவனிப்பதில்லை. தூத்துக்குடியில் அவரை சந்திப்பது என்பது நமது மாவட்ட சங்கத்திற்கு குறிஞ்சி மலரை தரிசிப்பது போலாகும்.

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் பழிவாங்கும் நோக்கத்துடன் நமது மாவட்ட சங்க நிர்வாகி தோழர் வனராஜன் அவர்களை தூத்துக்குடியிலிருந்து கோவில்பட்டிக்கு எந்த வித காரணமுமின்றி மாற்றல் செய்துள்ளது. BSNL தலைமையக உத்தரவுபடி மாற்றல் உத்தரவை ஏப்ரல் மாதத்தில்தான் வெளியிட வேண்டும் என்ற அம்சம் கூட கணக்கில் எடுத்துக்கொள்ள படவில்லை. இந்த முறையற்ற மாற்றலை ரத்து செய்யக் கோரி மாநில தலைமைப் பொது மேலாளாரிடமும் விவாதித்து மாநிலச்சங்கம் கடிதமும் கொடுத்துவிட்டது. மாநில நிர்வாகம் தலையிட்டாலும் கூட மாவட்ட நிர்வாகம் கேட்பதில்லை. மாவட்ட நிர்வாகத்தின் இந்த போக்கு என்பது BSNL நிறுவனத்தை பாதிக்கும்.

எனவே தூத்துக்குடியில் BSNL நிறுவனத்தையும், ஊழியர்களையும் பாதுகாக்க மாநிலச் சங்கம் போராடுவது என 17.12.2014 அன்று கூடிய மாநில செயற்குழு கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தலைமைப் பொதுமேலாளரிடம் 22.12.2014 அன்று மாநிலத் தலைவர், மாநிலச் செயலர் உள்ளிட்ட மாநிலச் சங்க நிர்வாகிகள் சந்தித்து எழுத்துப்பூர்வமாக 30.12.2014 அன்று மாநிலச் செயலர் தூத்துக்குடியில் உண்ணாவிரதம் போராட்டத்தை மேற்கொள்வார் என்பதனைத்தெரிவித்து விட்டோம். தலைமைப் பொது மேலாளர் அவர்கள் மீண்டும் தலையிடுவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

பிரச்சனைகள் தீரவில்லை எனில் நமது போராட்டம் வெடித்து கிளம்பும்.

**கோரிக்கைகள்:**

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகமே..!

1. தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட முறையற்ற மாற்றலை ரத்து செய் …
2. நீண்டகாலமாக தேங்கிக் கிடக்கும் ஊழியர் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்து வை.
3. தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் அலட்சிய போக்கினைக் கைவிட கோரி

**மாநிலச் செயலர் தோழர் A.பாபுராதாகிருஷ்ணன் உண்ணாவிரதம்**

**இடம்:** **பொது மேலாளர் அலுவலகம், தூத்துக்குடி.**
**நாள் :** 30.12.2014 **காலை 10 மணி**

**போராடுவோம்..! வெற்றி பெறுவோம்...!!**

**தோழமையுடன்**

A.**பாபு ராதாகிருஷ்ணன்**
**மாநிலச்செயலாளர்.**